Signature and Name of Invigilator

1. (Signature) ______________________

(Name) ______________________

2. (Signature) ______________________

(Name) ______________________

OMR Sheet No. : ......................................

(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |

(In figures as per admission card)

Roll No. ______________________

(In words)

**D 2 6 1 5**

# PAPER - II
# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** | Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.

   **Example :** ① ② ● ④ where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There are no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं। आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** ① ② ● ④ जबकि (3) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं। यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें। हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक ( कैलकुलेटर ) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं।**



www.examrace.com

# TAMIL
# தமிழ்
## Paper-II
## தாள்-II

**Note :** This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying **two (2)** marks. Attempt **all** questions.

**குறிப்பு :** இந்த வினாத்தாள் **ஐம்பது** (50) விடைதெரிவினாக்களைக்கொண்டது. ஒவ்வொருவினாவுக்கும் உரியமதிப்பெண்கள் **இரண்டு** (2). அனைத்துவினாக்களுக்கும் விடைதருக.

1. வேள் + தீயன் =
   (1) வேஃறீயன் (2) வேற்றீயன்
   (3) வேட்டீயன் (4) வேடீயன்

2. செலவழுங்கல் துறையில் அமைந்தது :
   (1) முல்லைப்பாட்டு (2) பட்டினப்பாலை
   (3) குறிஞ்சிப்பாட்டு (4) நெடுநல்வாடை

3. தேய்புரிப் பழங்கயிற்றினார் பாடல் இடம்பெற்ற நூல்:
   (1) குறுந்தொகை (2) கலித்தொகை
   (3) நற்றிணை (4) அகநானூறு

4. பாண்டிய கவாடகம் என்பது:
   (1) பாண்டிய நாட்டின் தலைநகர்
   (2) பாண்டிய நாட்டின் முத்து வகை
   (3) பாண்டிய மன்னர்தம் வரலாற்று நூல்
   (4) பாண்டிய நாட்டின் துறைமுகம்

5. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதில் -ஆ என்பது:
   (1) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச ஈறு
   (2) பலவின்பால் எதிர்மறை வினைமுற்று ஈறு
   (3) ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்ச ஈறு
   (4) வினையடை விகுதி



www.examrace.com

6. தொல்காப்பிய இயல் தலைப்புகளில் இயல் என்னும் சொல்லுடன் முடிவன:

(1) 22 (2) 23 (3) 24 (4) 25

7. பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வது:

(1) பிரமம் (2) ஆரிடம் (3) ஆசுரம் (4) இராக்கதம்

8. பிருதிவிலிங்கம் இடம்பெற்றுள்ள கோயிலை உடைய ஊர்:

(1) காஞ்சி (2) சிதம்பரம்

(3) திருவானைக்கா (4) காளத்தி

9. நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்:

(1) கால்டுவெல் (2) பெஸ்கி

(3) எல்லீஸ் (4) ஜி. யு. போப்

10. 'ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராக உலகியல் நடத்த வேண்டும்' என்று கூறியவர்:

(1) தாயுமானவர் (2) வள்ளலார்

(3) அருணகிரிநாதர் (4) குமரகுருபரர்

11. வல்லினம் இயல்பாய்ப் புணரும்:

(i) இயற்பெயர் முன்

(ii) ஈற்றுவினா முன்

(iii) யா வினா முன்

(iv) விளிப்பெயர்முன்

இவற்றுள்,

(1) (i), (ii), (iii) சரி

(2) (i), (ii), (iv) சரி

(3) (i), (iii), (iv) சரி

(4) (ii), (iii), (iv) சரி



www.examrace.com

12. பாண்டியனுடைய தலைநகராய்க் கபாடபுரம் இருந்து பிறகு அது தென்மதுரையாய் மாறியதற்குச் சான்று பகரும் நூல்கள்:

(i) மகாவமிசம்

(ii) இராமாயணம்

(iii) மகாபாரதம்

(iv) அர்த்தசாஸ்திரம்

இவற்றுள்,

(1) (i), (ii), (iii) சரி

(2) (ii), (iii), (iv) சரி

(3) (i), (iii), (iv) சரி

(4) (i), (ii), (iii), (iv) சரி

13. திருவிளையாடல்புராணம்:

(i) பெரும்பற்றப் புலியூர் நம்பியால் இயற்றப்பட்டது

(ii) காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டாகும்

(iii) பரஞ்சோதி அடிகளைப் பின்பற்றி எழுதப்பட்டது

(iv) தமிழ்ச் சங்கம் பற்றிய குறிப்புகள் கொண்டது

இவற்றுள்,

(1) (i), (iii), (iv) சரி

(2) (ii), (iii), (iv) சரி

(3) (i), (ii), (iv) சரி

(4) (i), (ii), (iii) சரி

14. வெண்பாவின்:

(i) நிலம் மருதமாகும்

(ii) நிறம் வெண்மையாகும்.

(iii) வாரம் திங்கள், வியாழம் ஆகும்

(iv) சாதி பார்ப்பனம் ஆகும்

இவற்றுள்,

(1) (ii), (iii), (iv) சரி

(2) (i), (iii), (iv) சரி

(3) (i), (ii), (iii) சரி

(4) (i), (ii), (iv) சரி



www.examrace.com

15. கலிங்கத்துப் பரணி:

(i) தக்கயாகப்பரணிக்கு முந்தியது

(ii) தாழிசையால் பாடப்பட்டது

(iii) கருணாகரத் தொண்டைமானின் வீரம்போற்றுவது

(iv) முதல் குலோத்துங்கன் காலத்து

இவற்றுள்,

(1) (i), (ii), (iii) சரி

(2) (i), (ii), (iv) சரி

(3) (ii), (iii), (iv) சரி

(4) (i), (iii), (iv) சரி

16. அசோகமித்திரனின் சிறுகதைத் தொகுப்பு:

(i) முறைப்பெண்

(ii) அப்பாவின் சிநேகிதர்

(iii) யுக சந்தி

(iv) நண்பனின் தந்தை

இவற்றுள்,

(1) (i), (iii), (iv) சரி

(2) (ii), (iii), (iv) சரி

(3) (i), (ii), (iii) சரி

(4) (i), (ii), (iv) சரி

17. சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்கள்:

(i) கு. அழகிரிசாமி

(ii) வா. செ. குழந்தைசாமி

(iii) சா. கந்தசாமி

(iv) சுந்தர ராமசாமி

இவற்றுள்,

(1) (i), (ii), (iii) சரி

(2) (i), (ii), (iv) சரியல்ல

(3) (i), (iii), (iv) சரியல்ல

(4) (ii), (iii), (iv) சரியல்ல



www.examrace.com

18. உறுதிக்கூற்று (உ) : தமிழகத்தில் ஆங்காங்கு அகழாய்வின்போது உரோமாபுரி நாணயங்கள் கிடைத்துள்ளன.

காரணம் (கா) : பண்டைக் காலத்தில் தமிழர்கள் கிரேக்கர்களோடு வாணிகத் தொடர்பு வைத்திருந்தனர்.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரியன்று, (கா) சரி
(3) (உ) சரியன்று, (கா) சரியன்று
(4) (உ) சரி, (கா) சரியன்று

19. உறுதிக்கூற்று (உ) : 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று பனம்பாரனார் பாயிரம் குறிக்கின்றது.

காரணம் (கா) : எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணம் தொல்காப்பியத்தில் உண்டு.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரியன்று, (கா) சரி
(3) (உ) சரி, (கா) சரியன்று
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

20. உறுதிக்கூற்று (உ) : சங்க இலக்கியங்களில் காணப்படும் சமயக் குறிப்புகள் பல தொல்காப்பியத்தில் இடம்பெறவில்லை.

காரணம் (கா) : தொல்காப்பியம் சங்க இலக்கியத்திற்கு முற்பட்டது.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

21. உறுதிக்கூற்று (உ) : கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய நூல்கள் எனப்படுகின்றன.

காரணம் (கா) : அவை சங்க காலத்திற்கு மிகவும் பிற்பட்டவை.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரியன்று, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரி, (கா) சரியன்று



www.examrace.com

22. உறுதிக்கூற்று (உ) : களவழி நாற்பது வரலாற்றைப் பின்பற்றியது.
காரணம் (கா) : கலிங்கத்துப் பரணியும் மூவருலாவும் களவழி கூறும் வரலாற்றை உறுதிப்படுத்துகின்றன.
(1) (உ) சரி, (கா) சரியன்று
(2) (உ) சரி, (கா) சரி
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

23. உறுதிக்கூற்று (உ) : மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்து கோவலன் கண்ணகியை மணம்புரிந்த நிகழ்ச்சி சிலம்பில் உண்டு.
காரணம் (கா) : ஆரியத் தாக்கம் சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ்ப் பண்பாட்டில் இருந்தது.
(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

24. உறுதிக்கூற்று (உ) : திருஞான சம்பந்தர் ஏழு கிழமைகளின் பெயர் களையும் ஒரு பதிகத்தில் வைத்துப் பாடியுள்ளார்.
காரணம் (கா) : பண்டைத் தமிழர்கள் வானியல் துறையில் நுண்ணறிவு பெற்றிருந்தனர்.
(1) (உ) சரியன்று, (கா) சரியன்று
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரி, (கா) சரி

25. உறுதிக்கூற்று (உ) : தமிழ் நாட்டில் குடியேறிய ஆரியர் கைம்மை நோன்பை மேற்கொண்டனர்.
காரணம் (கா) : தமிழகப் பெண்களிடையே கைம்மை நோன்பை நோற்கும் பழக்கம் உண்டு.
(1) (உ) சரி, (கா) சரியன்று
(2) (உ) சரி, (கா) சரி
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று



www.examrace.com

26. உறுதிக்கூற்று (உ) : பண்டை வணிகர்கள் கூட்டம்கூட்டமாக சாத்துக்களாகச் சென்று விற்பனையில் ஈடுபட்டனர்.

காரணம் (கா) : ஆறலைக் கள்வர் அக்காலத்தில் இல்லை.

(1) (உ) சரி, (கா) சரி

(2) (உ) சரியன்று, (கா) சரியன்று

(3) (உ) சரியன்று, (கா) சரி

(4) (உ) சரி, (கா) சரியன்று

27. உறுதிக்கூற்று (உ) : சங்க காலத்தில் உமணர், குயவர், தச்சர் எனப் பல குலங்கள் இருந்தன.

காரணம்(கா) : தொழில் அடிப்படையில் அவர்கள் பல்வேறு குலங்களாகஅக்காலத்தில் பகுக்கப் பெற்றிருந்தனர்.

(1) (உ) சரி, (கா) சரி

(2) (உ) சரி, (கா) சரியன்று

(3) (உ) சரியன்று, (கா) சரி

(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

28. நிரல்படுத்துக: வினா எழுத்துகள்.

(1) ஆ, ஏ, எ, ஓ, யா

(2) ஆ, ஓ, எ, யா, ஏ

(3) ஆ, எ, ஏ, ஓ, யா

(4) ஆ, யா, ஓ, எ, ஏ

29. நிரல்படுத்துக: மலைபடு திரவியம்.

(1) மிளகு, கோட்டம், அகில், தக்கோலம்

(2) மிளகு, அகில், கோட்டம், தக்கோலம்

(3) மிளகு, கோட்டம், தக்கோலம், அகில்

(4) மிளகு, தக்கோலம், அகில், கோட்டம்

30. நிரல்படுத்துக: பஞ்ச பட்சிகள்.

(1) வல்லூறு, ஆந்தை, கோழி, காகம், மயில்

(2) வல்லூறு, கோழி, காகம், மயில், ஆந்தை

(3) வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்

(4) வல்லூறு, காகம், கோழி, மயில், ஆந்தை



www.examrace.com

31. நிரல்படுத்துக: நட்சத்திரங்கள்.

(1) அச்சுவினி, கார்த்திகை, பரணி, உரோகிணி

(2) அச்சுவினி, உரோகிணி, பரணி, கார்த்திகை

(3) அச்சுவினி, உரோகிணி, கார்த்திகை, பரணி

(4) அச்சுவினி, பரணி, கார்த்திகை, உரோகிணி

32. நிரல்படுத்துக: அரண்.

(1) மலை, காடு, மதில், கடல்

(2) மலை, மதில், கடல், காடு

(3) மலை, கடல், காடு, மதில்

(4) மலை, காடு, கடல், மதில்

33. நிரல்படுத்துக: திருமால் அவதாரங்கள்.

(1) மச்சம், கூர்மம், நரசிம்மம், வராகம்

(2) மச்சம், நரசிம்மம், கூர்மம், வராகம்

(3) மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம்

(4) மச்சம், வராகம், கூர்மம், நரசிம்மம்

34. நிரல்படுத்துக: இராசிகள்.

(1) மேடம், மிதுனம், கற்கடகம், இடபம்

(2) மேடம், இடபம், மிதுனம், கற்கடகம்

(3) மேடம், இடபம், கற்கடகம், மிதுனம்

(4) மேடம், கற்கடகம், மிதுனம், இடபம்

35. நிரல்படுத்துக: பரிபாடலின் அமைப்பு.

(1) கொச்சகம், அராகம், எருத்து, சுரிதகம்

(2) கொச்சகம், சுரிதகம், அராகம், எருத்து

(3) கொச்சகம், எருத்து, அராகம், சுரிதகம்

(4) கொச்சகம், சுரிதகம், எருத்து, அராகம்



www.examrace.com

36. நிரல்படுத்துக: தேவர் வகை.

(1) ஆதித்தர், அச்சுவினிகள், உருத்திரர், வசுக்கள்

(2) ஆதித்தர், உருத்திரர், அச்சுவினிகள், வசுக்கள்

(3) ஆதித்தர், வசுக்கள், அச்சுவினிகள், உருத்திரர்

(4) ஆதித்தர், அச்சுவினிகள், வசுக்கள், உருத்திரர்

37. நிரல்படுத்துக: சதுரகராதி.

(1) பெயர், தொகை, பொருள், தொடை

(2) பெயர், தொகை, தொடை, பொருள்

(3) பெயர், பொருள், தொகை, தொடை

(4) பெயர், தொடை, தொகை, பொருள்

38. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பேரி யாழ் | (i) | 14 நரம்புகள் |
| (b) | மகர யாழ் | (ii) | 7 நரம்புகள் |
| (c) | சகோட யாழ் | (iii) | 19 நரம்புகள் |
| (d) | செங்கோட்டு யாழ் | (iv) | 21 நரம்புகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (iv) | (iii) | (ii) | (i) |
| (3) | (iv) | (ii) | (iii) | (i) |
| (4) | (iv) | (i) | (ii) | (iii) |

39. பொருத்துக .

| | | | |
|---|---|---|---|
| (a) | யவனத் தச்சரும் தண்டமிழ் வினைஞரும் தம்மொடும் கூடி | (i) | சிலப்பதிகாரம் |
| (b) | யவனர் தந்த வினைமாண் நன்கலம் | (ii) | மணிமேகலை |
| (c) | யவனர் நன்கலம் தந்த தண்டமிழ்த் தேறல் | (iii) | அகநானூறு |
| (d) | கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள் கலந்திருந்து | (iv) | புறநானூறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (ii) | (i) | (iii) | (iv) |
| (4) | (ii) | (iii) | (i) | (iv) |



www.examrace.com

40. பொருத்துக .

| | | | |
|---|---|---|---|
| (a) | அ | (i) | காகம் |
| (b) | இ | (ii) | கோழி |
| (c) | உ | (iii) | வல்லூறு |
| (d) | எ | (iv) | ஆந்தை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (i) | (ii) |
| (2) | (iii) | (ii) | (iv) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |

41. பொருத்துக .

| | | | |
|---|---|---|---|
| (a) | முல்லை அம்பு | (i) | நெஞ்சு |
| (b) | அசோக அம்பு | (ii) | குய்யம் |
| (c) | வனச அம்பு | (iii) | நெற்றி |
| (d) | நீல அம்பு | (iv) | உச்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (iii) | (ii) |
| (2) | (iv) | (iii) | (i) | (ii) |
| (3) | (iv) | (ii) | (i) | (iii) |
| (4) | (iv) | (iii) | (ii) | (i) |

42. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சேந்தன் | (i) | உமறு |
| (b) | சடையப்பன் | (ii) | திவாகரம் |
| (c) | சீதக்காதி | (iii) | புகழேந்தி |
| (d) | சந்திரன் சுவர்க்கி | (iv) | கம்பர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (ii) | (iv) | (iii) | (i) |
| (4) | (ii) | (iv) | (i) | (iii) |



www.examrace.com

43. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | முல்லை | (i) | அம்மூவன் |
| (b) | மருதம் | (ii) | ஓதலாந்தை |
| (c) | பாலை | (iii) | ஓரம்போகி |
| (d) | நெய்தல் | (iv) | பேயன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (i) | (ii) |
| (2) | (iv) | (iii) | (ii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (iv) | (ii) | (iii) | (i) |

44. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கு. அழகிரிசாமி | (i) | கம்பன் கண்ட தமிழகம் |
| (b) | கைலாசபதி | (ii) | இலக்கிய அமுதம் |
| (c) | ந. சஞ்சீவி | (iii) | இலக்கியமும் திறனாய்வும் |
| (d) | சாமி. சிதம்பரனார் | (iv) | சிலம்புத் தேன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iii) | (iv) |
| (2) | (ii) | (i) | (iv) | (iii) |
| (3) | (ii) | (iii) | (iv) | (i) |
| (4) | (ii) | (iii) | (i) | (iv) |

45. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒரு நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை | (i) | கா. செல்லப்பன் |
| (b) | நாட்டியக் கலை விளக்கம் | (ii) | சி. சு. செல்லப்பா |
| (c) | எங்கெங்கு காணினும் சக்தி | (iii) | அ. சீனிவாச ராகவன் |
| (d) | தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது | (iv) | சுத்தானந்த பாரதியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (ii) | (iv) | (i) |
| (2) | (iii) | (iv) | (i) | (ii) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |



www.examrace.com

46-50 பின்வரும் கவிதையைப் படித்து, அதனைத் தொடர்ந்துவரும் வினாக் களுக்கு விடைதருக.

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்.
வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்ற வொளிமுகமும்
புன்னகையின் புது நிலவும் போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்.
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ! அடடா!
அழகென்னும் தெய்வந்தான் அதுவென்றே அறிந்தேன்.

யோகந்தான் சிறந்ததுவோ, தவம் பெரிதோ என்றேன்.
யோகமே தவம், தவமே யோகமென வுரைத்தாள்.
ஏகமோ பொருளன்றி இரண்டாமோ என்றேன்.
இரண்டுமாம் ஒன்றுமாம் யாவுமாம் என்றாள்.
தாகமறிந்து ஈயும்அருள் வான்மழைக்கே வுண்டோ
தாகத்தின்துயர் மழைதானறிந்திடுமோ வென்றேன்.
வேகமுடன் அன்பினையே வெளிப்படுத்தா மழைதான்
விருப்புடனே பெய்குவது வேறாமோ என்றாள்.

காலத்தின் விதி மதியைக் கடந்திடுமோ என்றேன்.
காலமே மதியினுக்கோர் கருவியாமென்றாள்
ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ வென்றேன்.
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலா மென்றாள்.
ஏலத்தில் விடுவதுண்டோ எண்ணத்தை யென்றேன்.
எண்ணினால் எண்ணியது நண்ணுங்கா ணென்றாள்.
மூலத்தைச் சொல்லவோ, வேண்டாவோ என்றேன்.
முகத்தில் அருள் காட்டினாள்மோகமது தீர்ந்தேன்.

46. மங்கைவயது

(1) 15 (2) 16 (3) 17 (4) 18



www.examrace.com

47. நிரல்படுத்துக.

(1) யோகம், தாகம், ஏகம், வேகம்

(2) யோகம், தாகம், வேகம், ஏகம்

(3) யோகம், ஏகம், தாகம், வேகம்

(4) யோகம், ஏகம், வேகம், தாகம்

48. உறுதிக்கூற்று (உ):துயில்எழுந்துஅடடாஎனவியந்தேன்.
காரணம் (கா):அழகுஎனும்தெய்வம்எதிரில்நின்றாள்.

(1) (உ) சரி, (கா) சரி

(2) (உ) சரி, (கா) சரியன்று

(3) (உ) சரியன்று, (கா) சரி

(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

49. பொருத்துக.

(a) காலம் (i) தெய்வம்

(b) தவம் (ii) மதிக்குக்கருவி

(c) ஒளிமுகம் (iii) யோகம்

(d) அழகு (iv) நிலவு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

50. உறுதிக்கூற்று (உ) : மோகம்தீர்ந்தேன்.
காரணம்(கா) : அருள்காட்டினாள்முகத்தில்.

(1) (உ) சரி, (கா) சரியன்று

(2) (உ) சரி, (கா) சரி

(3) (உ) சரியன்று, (கா) சரி

(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

-oOo-



www.examrace.com

Space For Rough Work



www.examrace.com

Space For Rough Work



www.examrace.com